**இடைப்பட்ட நேரம்**
**ஜெனரல் லிண்டன் பக்கிங்ஹாமின் புத்தாண்டு பிரதிபலிப்பு**

# The time in between
# A New Year reflection by General Lyndon Buckingham

இந்த சிறிய பிரதிபலிப்பைப் பற்றி எழுதும் நேரத்தில் நான் கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டுக்கு இடைப்பட்ட நாட்களை அனுபவித்துக் கொண்டிருந்தேன். இது விடுமுறை நேரம் மற்றும் பிற நாட்களின் இயல்பை விட மிகவும் மெதுவாகவே காணப்படுகிறது. அழகான, பச்சை மலைகள் உருண்டு நகர்ந்து செல்வதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன், அது எனக்கு மிகவும் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது. இதனால் என் மனமும் உடலும் சீராக இருப்பதை என்னால் உணர முடிகிறது, 'ஆ' என் ஆண்டவரே, நீர் தந்த ஓய்வு மற்றும் மறுசீரமைப்பு நாட்களுக்காக உமக்கு நன்றி.

இது பிரதிபலிப்புக்கான சரியான நேரம் ஆகும். எனது வாழ்விலும், எனது குடும்பத்தின் வாழ்விலும் தேவன் அருளிய கிருபை, இரக்கம் மற்றும் அன்பிற்காக நான் நன்றி கூறுகிறேன். அவருடைய வாக்குத்தத்தங்கள் அனைத்திற்கான அவருடைய உண்மைத் தன்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். 2023 ஆம் ஆண்டிற்கான நிகழ்வுகள் முழுவதும் அவரது கரம் என்னோடு இருந்ததை என்னால் பார்க்க முடிந்தது. சவால்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் நிறைந்த ஒரு வருடத்தில் அவருடைய கருணையின் தாக்கத்தை நான் தயக்கமின்றி ஒப்புக்கொள்கிறேன். கர்த்தர் மிகவும் நல்லவர். ஜெபத்தின் வல்லமையையும், தேவனுடைய வார்த்தையில் இருக்கும் ஜீவனையும், அவருடைய ஜனங்களுடன் ஐக்கியம் கொள்வதன் மகிழ்ச்சியையும் என்னால் பிரதிபலிக்க முடிகிறது. இரட்சணிய சேனையில் எனது சேவையின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய பணியில் ஈடுபடுவதற்கான பாக்கியத்தை நான் வெகுவாய் அங்கீகரிப்பதுடன், அதனால் உலகெங்கிலும் உள்ள இரட்சணிய சேனை பணியில் ஏற்பட்ட தாக்கத்திற்காகவும் நான் நன்றி கூறுகிறேன். 2023 ஆம் ஆண்டு முழுவதும் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் உண்மையுடன் பணி செய்த அகில உலக இரட்சணிய சேனையாருக்கு நான் நன்றி கூறுகிறேன். உங்கள் விசுவாசமும் அர்ப்பணிப்பும் எனக்கு மிகப்பெரிய ஒரு உத்வேகம் ஆகும். இது நம் உலகில் ஒரு அற்புதமான மாற்றத்தையும் ஏற்படுத்தும் என்று மனப்பூர்வமாக நம்புகிறேன்..

''இடைப்பட்ட'' நேரம் புத்தாண்டைப் பற்றி சில சிந்தனைகள் என்னைத் தூண்டுகிறது. கவலை, பயம் மற்றும் நிச்சயமற்ற தன்மையுடன் வரும் புதிய ஆண்டை எதிர்கொள்பவர்கள் பலர் இருப்பதை நான் அறிவேன். உலகம் தற்போது மிகவும் குழப்பத்தில் இருந்து வருகிறது. இவ்வுலக செய்திகள் அவர்கள் கவலையை அதிகரிக்கச் செய்யவோ அல்லது இந்த ஆண்டு அவர்கள் வாழ்வை எந்த நிலைக்கு கொண்டுச் செல்லக்கூடுமோ என்று ஆச்சரியப்பட வைக்கும் அறிக்கைகளே அதிகமாக உள்ளது.

இப்படிப்பட்டச் சூழ்நிலையில் 2024-ஐத் தழுவுவதற்கு நான் தயாராகும் போது எனக்கு நம்பிக்கையூட்டுவதாகவும், ஊக்கமளிப்பதாகவும் இருக்கும் சில வேதவசனங்களைப் பற்றி யோசித்து வருகிறேன்.

செப்பனியா 3:17, உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார் அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார் அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார் அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார் (மகிழ்வுடன் பாடுவார்).

புலம்பல் 3:22-23 நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள் உமது உண்மை பெரிதாயிருக்கிறது.

ஏசாயா 41:10: நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன் திகையாதே, நான் உன் தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன் என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்.

அவருடைய சமூகம், இரட்சிப்பு, அன்பு, பலம் மற்றும் விசுவாசத்தை உள்ளடக்கிய வாக்குத்தத்தங்களுடன், புதிய ஆண்டு மூலம் வரும் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். நீங்கள் எப்படி?

உலகம் நிச்சயமற்ற தன்மையில் நிரம்பியிருந்தாலும், இரட்சணிய சேனையாக நமது பணியை இந்த உலகில் மிகவும் உறுதியாக செய்து வருகிறோம். தேவனை மேன்மையாக நேசிக்கும் மக்களாக நாம் தொடர்ந்து வாழவும், அவர் யார் என்றும், அவர் நமக்காக என்ன செய்தார் என்பதற்காக அவருக்குப் புகழையும் பெருமையையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை எப்போதும் தேடவும், இயேசு கிறிஸ்துவினால் நமக்குள் இருக்கும் நம்பிக்கைக்குரிய காரணத்தை சொல்ல நாம் எப்போதும் ஆயத்தமாக இருப்போம். அத்துடன் நம் வாழ்வில் இயேசு ஏற்படுத்திய வித்தியாசத்தை தெரிவிக்க நாம் ஆயத்தப்படுவதுடன், இந்த மாற்றத்தை பிற மக்களுடன் பகிர்ந்து கொள்ளவும், உலகளாவிய இரட்சணிய சேனை நமக்குத் தேவைப்படுவதால்; அவர் மீதுள்ள நம்பிக்கையின் மூலம் எவருக்கும் இரட்சிப்பு சாத்தியமாகும்.

2024-ல் நமது சீஷத்துவப் பயணத்தில், நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் பரிசுத்தத்தைப் பின்தொடர்வதில் மிகவும் கவனமாக இருக்குமாறு நான் அனைவரையும் ஊக்குவிக்கிறேன். உங்கள் அயலகத்தவர்கள் மீது பரிசுத்தமான வாழ்க்கையை ஏற்படுத்தக்கூடிய வல்லமையையும் செல்வாக்கையும் நீங்கள் ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். தேவனின் மகிமைக்காக வாழ்ந்த வாழ்க்கையும், உலகில் கிறிஸ்துவின் நறுமணமாக இருக்க வேண்டும் என்ற உண்மையான விருப்பமும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும். நமது தனிப்பட்ட பங்களிப்பு சிறியதாக இருக்கலாம், ஆனால் கூட்டணியான தாக்கம் எப்போதும் குறிப்பிடத்தக்கதாகவே இருக்கும்.

நமது செயல்முறை பங்களிப்பு உலகிற்கு மிகவும் தேவையாயிருக்கிறது. நாம் எண்ணிக்கையில் சிறியவர்களாக இருக்கலாம், ஆனால், பரிசுத்த ஆவியானவரால் அதிகாரம் பெற்று, அதில் ஈடுபடத் தயாராக இருக்கும் நமது பணியைப் பற்றி நாம் தெளிவாக இருக்கும்போது, நன்மைக்கான வலிமைமிக்க சக்தியாக நாமும் இருக்க முடியும். இதில் என்னையும் சேர்த்துகொள்ளுங்கள்!

கிருபையும் சமாதானமும் உங்களோடு இருப்பதாக!

தேவன் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக!

**லிண்டன் பக்கிங்ஹாம்**

**ஜெனரல்**